# பத்மனாபபுரம் நகராட்சி

த்மனாபபுரம் நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் 2021–ம் வருடம் நவம்பர் மாதம் 30–ம் தேதி காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு.

<u>பொருட்கள்</u>

1) இந்நகராட்சி சிறப்பு சாலை திட்டம் 2020-2021 ன் கீழ் ரூ.400.00 இலட்சம் மதிப்பீட்டில் 19 சாலைப் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது அதன்படி மேற்கண்ட பணிக்கு நிதி ஒதுக்கீடு இல்லாமல் 90 சதவீதம் கடனாக வழங்கப்படவுள்ளதால் இந்நகராட்சியில் நிதி ஆதாரம் போதிய அளவில் இல்லாததாலும் பணிகளை மேற்கொள்ள இயலாது எனவும் மேற்கண்ட சாலைப் பணிகளில் 4 சாலைப் பணிகள் நடைபெற்று வருவதாலும் மீதமுள்ள 15 சாலைப் பணிகள் துவங்கப்படாமல் உள்ளதாலும் கீழ்க்கண்டவாறு உள்ள 15 சாலைப் பணிகளை நகராட்சி நிவாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 2304/2021/இ1, நாள் 20/10/2021-ன் படி ரத்து செய்து உத்திரவிடப்பட்டுள்ளது.

| Sl. No. | Name of work | Length of Road in KM | Width of Road in M | Estimate Amount in lakhs | Package |
|---|---|---|---|---|---|
| 1 | Providing paver block at Market road (Ward No.12) in Padmanabhapuram Municipality. | 0.250 | 7.50 | 15.80 | |
| 2 | Improvement of BT surface at Charode road (Ward No. 8) in Padmanabhapuram Municipality . | 0.700 | 5.70 | 42.90 | |
| 3 | Providing pave block at Kottai Backside to Chanthai Vazhi road (Ward No. 2) in Padmanabhapuram | 0.700 | 4.750 | 42.00 | Package -I |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Municipality | | | | |
| 4 | Providing paver block at Ghaniyar street (W.No. 13) in Padmanabhapuram Municipality. | 0.095 | 3.00 | 7.30 | |
| 5 | Providing paver block at Ramanparambu (W.No 15 ) in Padmanabhapuram Municipality. | 0.400 | 3.00 | 22.00 | |
| | Total | 2.145 | | 130.00 | |
| 1 | Improvements to BT surface at Padmanabhapuram south street road (W.No. 2) in Padmanabhapuram Municipality. | 0.215 | 7.20 | 12.00 | |
| 2 | Improvements to BT surface at Padmanabhapuram North car street road (W.No 2) in Padmanabhapuram Municipality. | 0.203 | 8.50 | 14.00 | |
| 3. | Improvements to BT surface at Padmanabhapuram west street road (W.No. 2) in Padmanabhapuram Municipality. | 0.292 | 8.50 | 17.75 | |
| 4 | Improvements to BT surface at Padmanabhapuram East street road (W.No. 2) in Padmanabhapuram Municipality. | 0.300 | 7.50 | 17.25 | |
| 5 | Improvements to BT surface at Konar street road (W.No. | 0.500 | 5.00 | 19.50 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 5) in Padmanabhapuram Municipality. | | | | |
| 6 | Improvements to BT surface and paver block at Bharathi nagar road (W.No.8) in Padmanabhapuram Municipality. | 0.200<br>0.300 | 3.600<br>4.30 | 19.75 | |
| 7 | Improvements to BT surface at Mullai Nagar road (W.No.10) in Padmanabhapuram Municipality. | 0.210 | 3.00 | 15.25 | |
| 8 | Providing paver block at Perumalkulam road (W.No.12) in Padmanabhapuram Municipality. | 0.150 | 4.10 | 14.50 | |
| 9 | Providing paver block at Mudakulam road (W.No.14) in Padmanabhapuram Municipality. | 0.380 | 4.50 | 31.00 | |
| 10 | Providing paver block at Vazhavilai road (W.No. 8) in Padmanabhapuram Municipality. | 0.100 | 3.00 | 9.00 | |
| | Total | 2.8500 | | 170.00 | |

அதன்படி சிறப்பு சாலை திட்டம் 2020-2021 ன் கீழ் ரத்து செய்யப்பட்ட பணிகளின் விபரம் மன்றத்தின் பாவைக்கும் பதிவிற்கும்.

(ந.க.எண். 1211/2021/இ1)

<u>நகர் மன்றத் தீர்மானம் எண். 1842</u>

அனுமதிக்கப்படுகிறது.

2)இந்நகராட்சிக்குச் சொந்தமான மருந்துக் கோட்டை உரக்கிடங்கில் சேகரமாகும் கழிவுகளை (பழைய கழிவுகள் மற்றும் இயந்திர பழுது

காரணமாக சேர்ந்துள்ள கழிவுகள்) இயந்திரம் மூலம் அப்புறப்படுத்துவதற்கு 18/11/2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1, | சி. ஜெகஸ்லால்<br>தக்கலை | 1 மணி நேரத்திற்கு<br>ரூ. 2100/-வீதம் |
| 2, | பி. ஆஸ்டின் கிலாரி<br>காட்டுவிளை | 1 மணி நேரத்திற்கு<br>ரூ.2250/-வீதம். |

மேற்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் வ.எண். 2-யை விட வ.எண். 1-ல் உள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுத் தொகை குறைவாக உள்ளது. எனவே குறைவான மதிப்பீட்டு தொகை ஒப்பந்தப்புள்ளி அளித்த வ.எண். 1-ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு. சி. ஜெகஸ்லால் தக்கலை என்பவருக்கு விநியோக உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- குறைந்த மதிப்பீடு ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. சி. ஜெகஸ்லால் ஒப்பந்ததாரருக்கு வேலை உத்தரவு வழங்க அனுமதிக்கலாம்.

**<u>நகர் மன்றத் தீர்மானம் எண். 1843</u>**

அனுமதிக்கப்படுகிறது.

3)இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். 75 2378 வாகனத்துக்கு தகுதிச் சான்று பெறும் பொருட்டு பழுது பணிகள் மேற்கொள்ள 16/11/2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்குறிப்பிட்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை<br>ரூ. |
|---|---|---|
| 1, | அக்ஷயா மோட்டார்ஸ் | 47613/- |

| | | |
|---|---|---|
| | உண்ணாமலை கடை | |
| 2, | கணேஷ் மோட்டார்ஸ் நாகர்கோவில் | 40769/- |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1-ல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை விட வ.எண். 2-ல் காணும் கணேஷ் மோட்டார்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளது. எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த கணேஷ் மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த கணேஷ் மோட்டார்ஸ் நிறுவனத்தின் வேலை உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண். 725/2020/அ2)

**நகர் மன்றத் தீர்மானம் எண். 1844**

அனுமதிக்கப்படுகிறது.

4)இந்நகராட்சிக்குட்பட்ட மருந்துக் கோட்டை உரக்கிடங்கில் உரம் உற்பத்தி செய்ய மூலம் சுமார் 14.00 இலட்சத்திற்கு வாங்கப்பட்டது. மேற்கண்ட இயக்குவதற்கு கூடுதல் மின்பழு(.,)தேவைப்படுவதால் தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து மேற்கண்ட கூடுதல் மின்பழு இணைப்பிற்கான கேட்பு பெறப்பட்டது.

அதன்படி கேட்பு தொகை ரூ. 30811/-னை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் அவசர அவசியம் கருதி தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 3137/08/இ1)

**நகர் மன்றத் தீர்மானம் எண். 1845**

அனுமதிக்கப்படுகிறது.

5)இந்நகராட்சி ஈப்பு வாகனம் 74 0436-க்கு 03/12/2021 அன்றுடன் ஆயுள் காப்பீடு முடிவடையவுள்ளது. மேற்படி ஆயுள் காப்பீடு 2021-2022-ம் ஆண்டிற்கு புதுப்பித்தல் செய்வதற்கு ரூ.9370/- ஆகும். மேற்கண்ட தொகையினை . என்ற நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- அவசர அவசியம் கருதி தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2897/2007/இ1)

**<u>நகர் மன்றத் தீர்மானம் எண். 1846</u>**

அனுமதிக்கப்படுகிறது.

6)இந்நகராட்சி அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான எழுது பொருட்கள் விநியோகம் செய்ய இந்நகராட்சி உத்தரவு ந.க.எண். 1982/2018/அ1, நாள் 09/09/2021 ஈரோடு மாவட்ட அச்சக தொழில் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்டு அதன்படி பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு பில் பட்டிகை எண்.1346, நாள் 23/10/2021-ல் ரூ.133085/- ஐ(ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி மூன்றாயிரத்து என்பத்தி ஐந்து மட்டும் ) கேட்பு வரப் பெற்றுள்ளது.

அவசர அவசியம் கருதி ஈரோடு மாவட்ட அச்சக தொழில் கூட்டுறவு சங்கத்திற்கு விநியோக உத்தரவு வழங்கியதை ஏற்கவும் பில் பட்டிகை படி கேட்பு தொகை ரூ.133085/- (ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்தி மூன்றாயிரத்து என்பத்தி ஐந்து மட்டும் ) வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண். 1982/2018/அ1)

**<u>நகர் மன்றத் தீர்மானம் எண். 1847</u>**

அனுமதிக்கப்படுகிறது.

7)தமிழக அரசின் வளர்ச்சி திட்டங்கள் மக்களை சென்றடையும் தொழில் மலர் 2021-ல் இந்நகராட்சியிலிருந்து மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகளின் விபரம் தினசரி நாளிதழ்களில் வெளியிட்டமைக்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் தொகை பொது நிதியில் வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண். | நாளிதழின் பெயர் | பில் எண்/நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | தினகரன் | 3300306326 | 9975.00 |
| 2 | தினமலர் | NG2837 13/10/2021 | 11025.00 |

அ.கு:- அவசர அவசியம் கருதி மேற்படி தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர் மன்றத் தீர்மானம் எண். 1848**

அனுமதிக்கப்படுகிறது.

8)அரசு ஆணை எண். 71, ந.நி.ம.கு.வ. துறை, நாள் 13/09/2021-ன் படி நகராட்சிகளில் நீர் நிலைகள் புனரமைத்தல், பூங்காக்கள் அமைத்தல்,பொழுது போக்கு மற்றும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்துதல், மரம் நடுதல், பள்ளிக் கூடங்கள் மேம்படுத்துதல், பொது சுகாதார மையம், கற்றல் மையங்கள், சாலைகள், தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகள் கொண்ட “நமக்கு நாமே திட்டம் செயல்படுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பாவைக்கும் பதிவிற்கும்.

(ந.க.எண்.1194/2021/இ1)

**நகர் மன்றத் தீர்மானம் எண். 1849**

அனுமதிக்கப்படுகிறது.

9)இந்நகராட்சியில் ஒக்கி புயல் பாதிப்பின் போது அரசால் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதன்படியும், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி சம்மந்தப்பட்ட விபரத்தினையும் மே 2017 முதல் ஆகஸ்ட் 2018 வரையிலான காலகட்டத்தில் அந்த நிதி எந்தெந்த இனங்களின் கீழ் செலவு செய்யப்பட்டது என்ற விபரத்தினையும் மற்றும் அந்த இனங்களின் கீழ் சம்மந்தப்பட்ட கோப்புகள் சான்றொப்பமிட்ட நகல்களை சமப்பிக்குமாறு துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு (ம)கண்காணிப்புத் துறை, நாகர்கோவில் அவர்களின் கடிதம் எண். 89/2020// நாள் 16/11/2021ன் படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதன்படி ஒக்கிபுயல் சம்மந்தமான கோப்புகள் குறிப்புக் கோப்பு அளவு புத்தகம் போன்றவற்றினை ஜெராக்ஸ் எடுத்தமைக்குண்டான செலவினம் ரூ.2759/- சம்மந்தப்பட்ட பிரிவு இ1 எழுத்தர் திரு. ற்றி.கண்ணன் அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர் மன்றத் தீர்மானம் எண். 1850</u>**

அனுமதிக்கப்படுகிறது.

ஒப்பம்/-
தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையாளர்,
பத்மனாபபுரம் நகராட்சி